# தெனாலிராமன் கதைகள்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

தெனாலிராமன்
ஆந்திர மாநிலத்தில் உள்ள கார்லபதி கிராமத்தில் பிறந்தார்.
இவருடைய தந்தை இராமையா தாய் லட்சுமி அம்மாள் ஆவர். இவருடைய இயற்பெயர் இராமலிங்கன்.
தெனாலிராமன் சிறுவயதிலேயே தனது தந்தையை இழந்ததன் காரணமாக, இவருடைய தாய் தெனாலியில் உள்ள தன் சகோதரனின் வீட்டில் வசிக்கத் தொடங்கினார். தெனாலிராமன் தனது தாய்மாமன் ஆதரவில் வளர்ந்தார். இவர் தெனாலியில் வசித்ததால் தெனாலிராமன் என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.
தெனாலிராமனுக்குக் கல்வியில் ஆர்வமில்லை. ஆனால், மற்றவர்களைச் சிரிக்க வைக்கும் ஆற்றல் அவரிடம் இயல்பாகவே இருந்ததன் காரணமாக பிற்காலத்தில் விஜய நகரத்து அரசரான கிருஷ்ணதேவராயரின் அன்பைப் பெற்று அவருடைய அரசவையில் ‘விகடகவி’ என்ற பட்டத்தையும் பெற்றார்.

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
| --- | --- | --- |
| 1. | காளிதேவியிடம் பெற்ற வரம் | 02 |
| 2. | நீர் இறைத்த திருடர்கள் | 05 |
| 3. | சிறந்த பூ எது | 09 |
| 4. | தங்கமாம்பழமும் சூட்டுக்கோலும் | 12 |
| 5. | பாத்திரங்கள் குட்டி போட்ட கதை | 17 |
| 6. | கிடைத்ததில் சம பங்கு | 20 |
| 7. | எல்லாம் நன்மைக்கே | 24 |
| 8. | சொன்னதைச் சொல்லும் கிளி | 28 |
| 9. | பானைக்குள் யானை | 32 |
| 10. | பூனை விலையில் குதிரை | 36 |



# 1. காளிதேவியிடம் பெற்ற வரம்

ஒரு சமயம் தெனாலி கிராமத்துக்குத் துறவி ஒருவர் வந்தார். அவ்வூர் மக்கள் அனைவரும் அவரை வணங்கி ஆசி பெற்றனர். துறவியிடம் ஆசி பெற்றதனால் தான் நாம் இன்பமாக வாழ்கிறோம் என்றெண்ணிய மக்கள் அவரைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர். இதையெல்லாம் பார்த்த தெனாலிராமன் துறவியிடம் சென்று "தங்கள் ஆசியினால் தான் மக்கள் அனைவரும் இன்பமாக வாழ்கிறார்களா? அவரவர் உழைப்பின் மூலம் இன்பமாக வாழவில்லையா?" என்று கேட்டார்.

"அதைக்கேட்ட துறவி, "தம்பி! உன்னிடம் உள்ள அறிவிற்கு நீ அந்த காளிதேவியிடம் தான் வரம் பெற்று ஆசி பெற வேண்டும். எனவே, நான் காளிதேவியிடம் வரம் பெறத்தக்க மந்திரம் ஒன்றை உனக்குச் சொல்லித் தருகிறேன்" என்று கூறிவிட்டு அதைச் சொல்லியும் கொடுத்தார். அதைக்கேட்ட தெனாலிராமன், காளிதேவியின் கோவிலுக்குச் சென்று தேவியின் தரிசனத்தைக் காண தவம் இருந்தார். தெனாலியின் தவத்தில் மகிழ்ச்சியடைந்த காளிதேவி அவன் முன் தோன்றினாள். அப்போது காளிதேவியின் பத்து தலைகளைப் பார்த்து பயப்படுவதற்குப் பதில் பலமாகச் சிரித்தான் தெனாலிராமன். அவனுடைய சிரிப்பைப் பார்த்த காளிதேவி, "என் பத்து தலைகளைப் பார்த்து அனைவரும் அஞ்சுவர். ஆனால் நீ சிரிக்கிறாயே!" என்று கேட்டாள். அதற்குத் தெனாலிராமன், "எனக்குச் சளிபிடித்தால் ஒரு மூக்கை வைத்துள்ள நானே மிகவும் சிரமப்படுவேன். ஆனால் உனக்கோ பத்து மூக்குகள் உள்ளதை எண்ணியே நான் சிரித்தேன்" என்றான். இதைக்கேட்ட காளிதேவியும் சிரித்து விட்டாள்.

அதன் பின்னர், "மகனே! உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்! தருகிறேன்" என்றாள். "தாயே நான் அறிவிலும் செல்வத்திலும் சிறந்து விளங்குவதற்கேற்ற வரங்களை எனக்கு அளியுங்கள்" என்றான்.



இதைக்கேட்ட காளிதேவி “மகனே! எனது கைகளில் இரண்டு கிண்ணங்கள் உள்ளன. அதில் ஒரு கிண்ணத்தில் செல்வத்திற்கான பாலும், இன்னொன்றில் அறிவுக்கான பாலும் உள்ளது. இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றை நீ தேர்ந்தெடுத்து குடிக்கவேண்டும்” என்று கூறினாள்.

தெனாலிராமன் சிறிதும் தயக்கம் இல்லாமல் கண் இமைக்கும் நேரத்தில் இரண்டு கிண்ணங்களில் உள்ள பாலை வாங்கி, ஒரே கிண்ணத்தில் ஊற்றிவிட்டு அதை மடக்... மடக்... என குடித்தான். இதைப் பார்த்த காளிதேவி ஆச்சரியமடைந்து, “மகனே! ஏதேனும் ஒரு கிண்ணத்தில் உள்ள பாலை தானே குடிக்கக் கூறினேன்” என்றாள். அதற்குத் தெனாலிராமன், “ஆமாம் தாயே, நானும் ஒரு கிண்ணத்தில் உள்ள பாலைத்தானே குடித்தேன்.” என்றான். உடனே காளிதேவி, “ஏன் இரண்டு கிண்ணங்களில் உள்ள பாலையும் ஒன்றாகக் கலந்தாய்?” என்று கேட்டாள். “இரண்டு கிண்ணங்களில் உள்ள பாலையும் ஒன்றாகக் கலக்கக்கூடாது என்று தாங்கள் கூறவில்லையே!” என்றான் தெனாலிராமன். அதைக்கேட்ட காளிதேவி மிகுந்த மகிழ்ச்சியுடன், “மகனே! என்னையே ஏமாற்றிய, உன் அறிவை எண்ணி நான் மிகுந்த ஆனந்தம் கொண்டேன். நீ உனது அறிவினால் பிற்காலத்தில் பேரும் புகழும் பெற்று சிறந்த ‘விகடகவியாக’ விளங்குவாய்!” என ஆசி வழங்கிவிட்டு காளிதேவி மறைந்தாள்.

***

# 2. நீர் இறைத்த திருடர்கள்

விஜயநகரம் என்ற நாட்டை கிருஷ்ணதேவராயர் என்ற மன்னர் சீரும் சிறப்புமாக ஆட்சி செய்து வந்தார். இவருடைய அரசவையில் ஒருவரான தெனாலிராமன் மிகவும் புத்திசாலியாகவும், அறிவில் சிறந்தவராகவும் விளங்கினார். அதுமட்டுமில்லாமல், நாட்டு மக்களுக்கும் மன்னருக்கும் ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தீர்க்கவும் செய்தார்.

ஒரு சமயம் விஜயநகர நாட்டில் திருடர்களின் பயம் அதிகமாக இருந்தது. இதனால் திருடர்களைக் கண்டுபிடித்து திருட்டை ஒழிக்க வேண்டும் என்று மக்கள் அனைவரும் மன்னரிடம் முறையிட்டனர். உடனே மன்னரும் திருடர்களை ஒழிக்க தனது அமைச்சர்கள் மற்றும் காவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த சமயத்தில் ஓர் நாள் இரவு தன் வீட்டுத் தோட்டத்தில் நான்கு திருடர்கள் பதுங்கி இருப்பதைத் தெனாலிராமன் பார்த்தான். உடனே வீட்டிற்கு வந்து தன் மனைவியிடம், “கமலா, நமது ஊரில் திருடர்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. அதனால் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்” என்றான். உடனே அவனுடைய மனைவி, ‘அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்’ என்று கேட்டாள். அதற்குத் தெனாலிராமன்,

“வீட்டிலுள்ள நகை மற்றும் விலையுயர்ந்த பொருட்களை ஒரு பெட்டியில் போட்டு பூட்டி, கிணற்றில் போட்டு விடுவோம்.

திருட்டுப்பயம் ஒழிந்தவுடன் கிணற்றிலிருந்து எடுத்துக்கொள்வோம்” என்று திருடர்களுக்குக் கேட்குமாறு சத்தமாகக் கூறினான். திருடர்களும் தெனாலிராமன் கூறியதைக் கேட்டனர். அந்தச் சமயத்தில் தனது மனைவியிடம் மெதுவாக, திருடர்கள் ஒழிந்துள்ளதைக் கூறி பெட்டியில் கல், மணல், பழைய பொருட்களைப் போட்டு மூடுமாறு கூறினான். பின்னர் அந்தப் பெட்டியை இருவரும் தூக்கி கிணற்றில் போட்டனர்.




திருடர்களும், “நாம் வீட்டிற்குள் புகுந்து திருட வேண்டியதில்லை. கிணற்றிலிருந்து பெட்டியை எடுத்துக்கொள்ளலாம்” என்று மகிழ்ச்சியடைந்தனர்.

தெனாலிராமனும் அவனுடைய மனைவியும் வீட்டிற்குள் சென்றவுடன், திருடர்கள் கிணற்றில் உள்ள பெட்டியை எடுக்க கிணற்றை எட்டிப் பார்த்தனர். கிணறு மிகவும் ஆழமாக இருந்ததைப் பார்த்து பயந்த ஒரு திருடன், “அண்ணா! தண்ணீர் குறைவாகத் தான் இருக்கிறது. நாம் ஏற்றம் மூலம் தண்ணீரையெல்லாம் இறைத்துவிட்டு பெட்டியை எடுத்துவிடுவோம்” என்று கூறினான். உடனே மற்றவர்களும் அதற்குச் சம்மதித்தனர். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த தெனாலிராமன், திருடர்கள் நீரை இறைக்கத்தொடங்கிய சிறிது நேரம் கழித்து தோட்டத்தின் பின் பக்கமாக சென்று, அவர்கள் இறைத்த நீரை தோட்டத்தில் உள்ள பயிர்களுக்குப் பாயும்படியாக வாய்க்காலைத் திருப்பிவிட்டான்.

இதையறியாமல் திருடர்களும் ஒருவர் மாற்றி ஒருவர் கிணற்றிலிருந்து நீரை இறைத்துக்கொண்டிருந்தனர். பொழுதும் விடிந்தது, ஆனால் கிணற்றில் மட்டும் நீர் குறையவே இல்லை. இதனால் திருடர்கள், “நாளை இரவும் வந்து நீரை இறைத்துவிட்டு பெட்டியை எடுக்கலாம்” என்று பேசிக்கொண்டு இருந்தனர். அவர்கள் பேசியதைக் கேட்ட தெனாலிராமன், “நாளை வரவேண்டாம். நீங்கள் இன்று இறைத்த நீர் இன்னும் ஒரு வாரத்திற்குப் போதும். நீங்கள் செய்த உதவிக்கு நன்றி” என்றான்.

தெனாலிராமன் கூறியதைக் கேட்ட திருடர்களுக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. அதுமட்டுமில்லாமல் தங்களை ஏமாற்றி நீர் இறைக்க வைத்த தெனாலிராமனை மனதிற்குள் எண்ணி ஆச்சரியமடைந்தனர். மேலும் அங்கே இருந்தால் பிடிபட்டு விடுவோம் என்றெண்ணி ஓட முயன்றவர்களைத் தெனாலிராமன் பிடித்து ஒரு தூணில் கட்டினான். பின்னர், அரண்மனைக் காவலாளிகளுக்கும் தகவல் கொடுத்து. அவர்களைக் கைது செய்து மன்னரிடம் அழைத்துச் சென்றனர்.





# 3. சிறந்த பூ எது?

ஒரு சமயம் விஜயநகரத்திற்குப் புலவர் ஒருவர் வந்தார். அவர் சகல சாஸ்திரங்களையும் கற்றவர். மேலும் தம்மைப் போல் புலமை பெற்றவர் யாரும் இந்த உலகில் இருக்கமுடியாது என்ற ஆணவம் கொண்டவர். விஜயநகர அவையில் தன் திறமையை வெளிப்படுத்த, ஒரு வினாவையும் எழுப்பினார். அவையோரைப் பார்த்து, "என் மனதில் ஒரு கேள்வி எழுந்துள்ளது. அக்கேள்விக்கான சரியான பதிலை இங்குள்ளவர்களால் கூற முடியுமா? என வினா எழுப்பினார். மன்னர், "அது என்ன கேள்வி?" எனக் கேட்டார். புலவர், "உலகில் சிறந்த பூ எது?" இந்தக் கேள்விக்கு சரியான பதில் கூறும் நபரை என்னைவிட அறிவில் சிறந்தவர் என்று ஏற்றுக்கொள்கிறேன்" என்றார். உடனே அரசவையில் உள்ள அனைவரும் தங்களது பதில்களைக் கூற ஆரம்பித்தனர். அமைச்சர், "ரோஜா தான்..."என்றார். ராஜகுரு, "மல்லிகை தான்" என்றார். இன்னும் சிலர், "சாமந்திப்பூ" என்றனர். மீதியுள்ளவர்கள் "அல்லிப்பூ" என்று கூறினர். அவர்கள் அனைவரும் கூறியதைக் கேட்ட புலவர், நீங்கள் கூறியவை சரியான பதில் அல்ல என்று கூறிவிட்டு, மன்னரிடம் "தங்கள் அவையில் சிறந்தவர்கள் இல்லையா?" என்று கேட்டார். கிருஷ்ணதேவராயர் அமைதியாக இருந்த தெனாலிராமனைப் பார்த்தார். உடனே தெனாலிராமனும், "உலகில் சிறந்த பூ பருத்திப் பூ" என பதில் கூறினார் "அது எப்படி? பருத்திப் பூ சிறந்த பூ ஆகும்?" என்று புலவர் கேட்க அதற்குத் தெனாலிராமன், "புலவரே! நாம் அன்றாடம் உடுத்தும் உடை பருத்திப் பூவில்தான் தயாராகிறது. நமது மானம் காக்க உதவும் பருத்திப் பூவே சிறந்தது" என்றார். இதைக்கேட்ட புலவர் தன் தோல்வியையும், ஆணவத்தையும் எண்ணி தலை குனிந்தார். மன்னர் மகிழ்ச்சியடைந்து தெனாலியை கட்டியணைத்துக் கொண்டார். அதோடுமட்டுமில்லாமல் நூறு பொற்காசுகளைப் பரிசாகவும் அளித்தார்.

***







# 4. தங்கமாம்பழமும் சூட்டுக்கோலும்

ஒரு சமயம் மன்னர் கிருஷ்ணதேவராயர், அரசவையில் மிகவும் சோகமாகக் காணப்பட்டார். அதைப் பார்த்த அமைச்சர்கள், " தங்களின் சோகத்திற்கான காரணம் என்ன?" என்று கேட்டனர். அமைச்சர்களே! "நாளை எனது தாயாரின் முதலாவது நினைவுநாள். அவர் இறக்கும் தருவாயில் மாம்பழம் சாப்பிட ஆசைப்பட்டார். ஆனால் மாம்பழம் கொண்டு வந்து தருவதற்குள் அவர் இறந்துவிட்டார். அதனால் அவரது ஆத்மா சாந்தியடையாமல் இருக்குமோ, என்ற கவலை தான் என் மனதை மிகவும் வாட்டுகிறது" என்றார் மன்னர்.

அதைகேட்ட அமைச்சர்கள், "நமது அரண்மனைப் புரோகிதர்களை அழைத்து ஆலோசனை கேட்போம்" என்று கூறினார்கள் , அவர்கள் கூறியபடியே புரோகிதர்களை அழைத்து ஆலோசனை கேட்டார் மன்னர். பேராசை பிடித்த புரோகிதர்கள் "நூற்றியெட்டு தங்க மாம்பழங்களை நூற்றியெட்டு புரோகிதர்களுக்குக் கொடுத்தால் தங்களுடைய தாயாரின் ஆத்மா சாந்தியடையும்" என்றனர். மன்னரும் அதற்குச் சம்மதித்தார். தங்கத்தால் நூற்றியெட்டு மாம்பழங்கள் செய்ய ஏற்பாடு செய்தார். அந்த நூற்றியெட்டு தங்க மாம்பழங்களை நூற்றியெட்டு புரோகிதர்களுக்கும் கொடுத்தார். புரோகிதர்களும் மிக்க மகிழ்ச்சியுடன் தங்க மாம்பழங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இதையெல்லாம் பார்த்த தெனாலிராமன், "அந்த நூற்றியெட்டு தங்க மாம்பழங்களைச் செய்யத் தேவையான தங்கங்களை ஏழை மக்களுக்குக் கொடுத்தால் அவர்களாவது பயனடைவார்கள். இந்தப் புரோகிதர்கள் மிகவும் பேராசை பிடித்தவர்களாகவும், மன்னரை ஏமாற்றுபவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்" என்றெண்ணி அதன்படி செயலாற்றவும் தொடங்கினார்.





உடனே அரண்மனைக்குச் சென்று புரோகிதர்களைச் சந்தித்தார். “என் தாயார் நினைவு நாள் வருகிறது. என் தாயாரின் இறுதி ஆசையை நிறைவேற்றவில்லை என்ற குற்றவுணர்ச்சியில் இருக்கிறேன். தாங்கள் அனைவரும் வந்து அதற்கான பரிகாரங்களைச் செய்ய வேண்டும்” என்றார். உடனே புரோகிதர்களும், “தங்க மாம்பழப் பரிகாரம் நன்றாக வேலை செய்கிறதே என்றெண்ணியபடி, நாங்கள் கண்டிப்பாக வருகிறோம்” என்றனர். புரோகிதர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் தெனாலிராமன் வீட்டிற்கு வந்தனர்.

தெனாலிராமனும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று அமரச் செய்தார். அவர்களுக்குத் தெரியாமல் கதவுகளை நான்கு பக்கமும் தாழிட்டான். நன்கு பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் அனைவருக்கும் சூடு வைத்தான். புரோகிதர்கள் ஐயோ! அம்மா! என்று கதறிக்கொண்டே மன்னரிடம் சென்று முறையிட்டனர்.

மன்னர் காவலாளிகளை அனுப்பி தெனாலிராமனை அழைத்து வருமாறு கூறினார். தெனாலிராமன் வந்ததும் “ஏன் புரோகிதர்களுக்குச் சூடுபோட்டாய்? என்ன செயல் இது?” ஏன் இவ்வாறு செய்தாய்?” என்று கேட்டார்.

“மன்னா... என்னை மன்னிக்கவேண்டும். நான் சொல்வதைக் கவனமாக கேளுங்கள். எனது தாயாருக்கு இறக்கும் தருவாயில் வலிப்பு நோய் வந்து விட்டது. நான் வைத்தியரிடம் கேட்டதற்கு நன்கு பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் சூடு வைத்தால் சரியாகிவிடும் என்று கூறினார். சூடு போடும் முன் எனது தாயார் இறந்துவிட்டார். ஆகையால் அவரது ஆன்மா சாந்தியடைய நூற்றியெட்டு புரோகிதர்களுக்குச் சூடு வைத்தால் சரியாகிவிடும் என்பதனால் இவர்களுக்குச் சூடு போட்டேன். இதில் தவறேதும் இல்லையே” என்று தெனாலிராமன் கூறினார்.

இதைக் கேட்ட மன்னர் கடும் கோபம் கொண்டார். “இது முட்டாள்தனமாக உள்ளதே” என்றார். “இல்லை மன்னா!, முன்பு தங்கள் தாயார் மாம்பழம் சாப்பிடாமல் இறந்ததால் அவர்கள் ஆன்மா சாந்தி அடைய நூற்றியெட்டு தங்க மாம்பழங்களை நூற்றியெட்டு புரோகிதர்களுக்குக் கொடுத்தீர்களே... அதுபோலத்தான், இதுவும் அரசே!” என்றான் தெனாலிராமன்.

இதைக் கேட்ட அரசர் தன் தவறை உணர்ந்தது மட்டுமில்லாமல், தெனாலிராமனைப் பார்த்து, “நான் செய்த தவறை உன் அறிவினால் தெளிய வைத்தாய்” என்று பாராட்டவும் செய்தார். மேலும் புரோகிதர்களின் பேராசையையும் புரிந்து கொண்டார்.

புரோகிதர்கள் தங்களுடைய பேராசையை எண்ணி தலைகவிழ்ந்து நின்றனர்.

***





# 5. பாத்திரங்கள் குட்டி போட்ட கதை

விஜயநகர நாட்டில் செல்வந்தன் ஒருவன் வட்டிக்குப் பணம் கொடுக்கும் தொழிலைச் செய்து வந்தான். அவன் மக்களிடம் ரூபாய்க்கு ஐம்பது பைசா என்று அநியாய வட்டி வாங்கினான். இதனால் அவனிடம் வட்டிக்குப் பணம் வாங்கும் மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். இதைக் கேள்விப்பட்ட தெனாலிராமன், அந்தச் செல்வந்தனைத் திருத்த திட்டம் போட்டார். அவன் வட்டித் தொழிலோடு சமையல் பாத்திரங்களையும் வாடகைக்கு விட்டான்.

ஒரு நாள் தெனாலிராமன், செல்வந்தனிடம் “என் மகனின் காதணி விழாவிற்கு சில பாத்திரங்கள் வாடகைக்கு வேண்டும்” என்று கேட்டார். தெனாலிராமன் கேட்டபடியே செல்வந்தனும் பாத்திரங்களைக் கொடுத்தான். இரண்டு நாட்கள் சென்ற பின் தெனாலிராமன் அந்தப் பாத்திரங்களுடன் மேலும் சில சிறிய பாத்திரங்களையும் சேர்த்துக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்ட செல்வந்தன் “நான் பெரிய பாத்திரங்கள் மட்டும் தானே கொடுத்தேன். அதை மட்டும் கொடுக்காமல் ஏன் சிறிய பாத்திரங்களையும் சேர்த்துக் கொடுத்துள்ளீர்கள்” என்று கேட்டான். அதைக்கேட்ட தெனாலிராமன் “நீங்கள் கொடுத்த பாத்திரங்கள் குட்டி போட்டன. குட்டிகளை தங்களிடம் கொடுப்பது தானே நியாயம்” என்றார். இவர் சரியான முட்டாளாக இருக்கின்றாரே என்றெண்ணி ஆமாம் ஆமாம்... அந்தப் பாத்திரங்களை உன்னிடம் கொடுக்கும்போது அவை கருவுற்று இருந்தன. அதனால் தான் குட்டி போட்டுள்ளன” என்றான். இதைக்கேட்டு தெனாலிராமனும் சிரித்துக்கொண்டே சென்றுவிட்டார். சில மாதங்கள் சென்றபின் தெனாலிராமன், “என் வீட்டில் விசேஷம் நடைபெற உள்ளது. விசேஷத்தில் கலந்து கொள்ள மன்னர் மற்றும் அரசப் பிரதிநிதிகள் அனைவரும் வருகிறார்கள். அதனால் தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரங்கள் வேண்டும்” என்று கேட்டார்.தெனாலிராமனின் நாணயத்தை அறிந்த அவர் ராமன் கேட்டபடியே, தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களைக் கொடுத்தான்.





கொடுக்கும்போது இவை “கருவுற்று இருப்பதால் விரைவில் குட்டிகளைப் போடும் எனவே அந்த குட்டிகளையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும்”என்று கூறினான். உடனே தெனாலிராமனும், “சரி” என்று கூறிவிட்டு பாத்திரங்களை வாங்கிச்சென்றான். சில மாதங்கள் சென்றன. தெனாலிராமன் பாத்திரங்களைத் திரும்பத் தரவேயில்லை. அதனால் செல்வந்தன் அவருடைய வீட்டிற்குச் சென்று, ”இவ்வளவு நாட்களாகியும் ஏன் பாத்திரங்களைக் கொண்டுவந்து தரவில்லை” எனக் கோபத்துடன் கேட்டான். அதற்குத் தெனாலிராமன், “நான் கூறுவதைக் கேட்டால் நீங்கள் மிகவும் வருந்துவீர்கள். அது என்னவென்றால் பாத்திரங்கள் கருவுற்று இருந்ததல்லவா... பிரசவம் மிகவும் கஷ்டமாக இருந்ததால் அனைத்துப் பாத்திரங்களும் இறந்துவிட்டன” என்றான்.

இதைக்கேட்ட அவன் “என்ன உளறுகிறாய்? பாத்திரங்கள் இறக்குமா? எனக் கோபத்துடன் கேட்டான். அதற்குத் தெனாலிராமன், “சென்றமுறை பாத்திரங்கள் குட்டி போட்டதை மட்டும் ஏற்றுக்கொண்டாயல்லவா? அதுபோலத்தான்... பாத்திரங்கள் இறந்ததையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லை நான் கூறுவது தவறென்று நினைத்தால் உடனே என்னுடன் அரசவைக்கு வா? மன்னரிடம் முறையிடுவோம். அவரின் தீர்ப்புப் படியே நடப்போம்” என்றான். தெனாலிராமன் கூறியதைக் கேட்ட செல்வந்தன் பயத்துடன் அவ்விடத்தை விட்டு செல்ல முயன்றான். இருப்பினும் தெனாலிராமன் அவனை விடாது இழுத்துச்சென்று மன்னரிடம் நிறுத்தி, மக்களிடம் அநியாய வட்டி வாங்குவதைப் பற்றி முறையிட்டான். இதையெல்லாம் கேட்ட மன்னர் “பாத்திரங்கள் குட்டி போடும் என்றால் அவை பிரசவத்தின் போது ஏன் இறக்கவும் கூடாது? இது உனது பேராசைக்குக் கிடைத்த நஷ்டமே!. இனிமேலாவது நியாயமான வட்டியை மக்களிடம் வாங்கு”என்று கூறி அனுப்பி வைத்தார். அதுமட்டுமில்லாமல் தெனாலிராமனின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டி பரிசும் வழங்கினார்.

***

# 6. கிடைத்ததில் சம பங்கு

கிருஷ்ண தேவராயர் அரண்மனையில் அமைச்சருக்கான தேர்வு நடைபெற்றது அதில் எப்படியாவது கலந்துகொள்ள வேண்டும் என்றெண்ணி தெனாலிராமன் அரண்மனைக்குள் செல்ல முயன்றான். ஆனால் வாயில் காவலர்கள் ராமனை உள்ளே விட மறுத்தனர். அதையும் மீறி உள்ளே நுழைய எண்ணிய தெனாலிராமன் வாயில் காவலனிடம், “என்னை உள்ளே போக விட்டால் கிடைக்கும் பரிசுத் தொகையில் பாதியை உனக்குத் தருகிறேன்” என்றான். பரிசுக்கு ஆசைப்பட்ட காவலனும் தெனாலிராமனை உள்ளே அனுப்பினான்.

அரசவையில் மன்னர் உட்பட அனைவரும் இருந்தனர். அவர்கள் முன்னிலையில் தெனாலிராமன் நின்றான். தெனாலிராமனிடம் மன்னர் கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார். ”இந்த உலகத்தில் பயங்கரமான ஆயுதம் எது?” என்று மன்னர் கேட்க, தெனாலி சற்றும் யோசிக்காமல் “இந்த உலகத்தில் பயங்கரமான ஆயுதம் மனிதனின் நாக்கு “என்று பதில் அளித்தான். உடனே மன்னர், அது எவ்வாறு? என்று கேட்க, தெனாலிராமன், “மன்னா! இந்த நாக்கு எலும்பில்லாதது, எங்கு எவ்வாறு பேசவேண்டுமோ அங்கு அவ்வாறு பேசும். உண்மையை பொய் என்றும், பொய்யை உண்மையென்றும், நல்லோரை தீயோர் என்றும் தீயோரை நல்லோர் என்றும் கூறும். எனவே நாக்கு தான் இந்த உலகில் மிக கொடிய ஆயுதம்” என்றும் கூறினான்.

அதுமட்டுமில்லாமல், சில அமைச்சர்கள் கேட்ட கேள்விகளுக்கும் தெனாலிராமன் மிகச் சாதுரியமாகப் பதில் அளித்தான். அதைக்கேட்ட மன்னரும், அரசவையில் உள்ளவர்களும் ஆச்சரியமடைந்தனர். மன்னர் தெனாலிராமனைப் பார்த்து “உன் திறமையைக் கண்டு நான் வியக்கிறேன்.





இன்று முதல் என் அரசபையில் நீயும் ஒரு அமைச்சர் என்று சொல்லி, உனக்கு என்ன பரிசு வேண்டும் கேள்!" என்று கேட்க, தெனாலிராமன், "எனக்கு ஐம்பது பொற்காசுகளும், ஐம்பது சவுக்கடிகளும் வேண்டும்" என்றான். மன்னர், "ஏன் இவ்வாறு கேட்கிறாய்?" என்றார். அதற்குத் தெனாலிராமன், அரண்மனை வாயிலில் நடந்ததைக் கூறினான். உடனே மன்னர், வாயில்காவலனை அழைத்து வரக் கூறினார். வந்த காவலனிடம், "ராமன் கூறியது உண்மையா?" என்று கேட்டார். வாயிற்காவலனும் அதை ஒத்துக்கொண்டான். தெனாலிராமன் மன்னரிடம், "நான் அவனுக்கு வாக்கு கொடுத்தது போல நான் வாங்கிய பரிசுத் தொகையில் பாதியான ஐம்பது சவுக்கடிகளை அவனுக்கே கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டான். மன்னரும் அதை நிறைவேற்றினார். மேலும் தெனாலிராமனின் புத்திக்கூர்மையையும் சமயோசித அறிவையும் பாராட்டினார்.

***





# 7. எல்லாம் நன்மைக்கே

ஒரு சமயம் கிருஷ்ணதேவராயரும் அவருடைய மந்திரிகளும் வேட்டைக்குச் செல்ல ஆயத்தம் ஆனார்கள். அப்பொழுது எதிர்பாராத விதமாக மன்னரின் கையில் வால் ஒன்று பட்டு இரத்தம் பீறிட்டது. உடனே அமைச்சர்கள், அரசருக்கு உதவினார்கள். ஆனால் தெனாலிராமனோ, “எல்லாம் நன்மைக்கே!” என்று கூறினான். அதைகேட்ட அரசர் கடும் கோபத்துடன் “நான் வலியால் துடிப்பது உனக்கு நன்மையா?” என்று கூறி காவலர்களை அழைத்து தெனாலி ராமனை சிறையில் அடைக்க உத்தரவிட்டார். அதற்கும் தெனாலிராமன், நடப்பதெல்லாம் நன்மைக்கே! என்று கூறிவிட்டு, சிறைச்சாலை நோக்கி நடந்தான்.

சிறிது நேரம் கழித்து மன்னர் தனது படைகளுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றார் . அவர்கள் வேட்டைக்கு சென்ற நேரம் ஒரு விலங்கு கூட கிடைக்கவில்லை. மதிய வேளையில் களைப்பு அவர்களை வாட்ட ஒரு மரத்தடியில் அமர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தார்கள். சற்று நேரம் கழித்து, கண்விழித்துப் பார்த்த போது மன்னரைக் காணவில்லை. மன்னரைத் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. இதனால் பதற்றம் கொண்ட படை வீரர்கள் நாட்டை நோக்கி விரைந்து சென்றனர். இந்நிலையில் மன்னர் காட்டுவாசி மக்களால் சிறைப்பிடிக்கப்பட்டார். அம்மக்கள் மன்னனைப் பலியிட அவர்களின் கோவில் முன்பு நிறுத்தினார்கள். மன்னன் தன் நிலையை எண்ணி வருந்தினான்.

காட்டு வாசிகள் தலைவன், மன்னனைப் பலியிட முயன்ற போது மன்னரின் கையில் உள்ள காயத்தைப் பார்த்தான். உடனே தன் காட்டுவாசி மக்களிடம், “அரசனது கையைச் சுட்டிக்காட்டி நரபலி இடப் பொருத்தமானவன் இல்லை” என்று கூறினான். மன்னருக்கு ஆச்சரியம். மன்னர் அதற்கான காரணத்தைக் கேட்கும் போது, “இறைவனுக்குப் படைக்கும் படையல் தூய்மையானதாக இருக்க வேண்டும், உன் கையிலோ வெட்டுக்காயம் இருக்கிறது.





உன்னைப் பலியிட்டால் நாங்கள் கடவுளின் சாபத்திற்கு ஆளாக நேரிடும்" என்று கூறி மன்னரை அனுப்பி வைத்தான்.

மன்னர் வரும் வழியில் இதைப் பற்றி சிந்திக்க தெனாலிராமன் கூறியது நினைவுக்கு வந்தது. உடனே மன்னர் சிறைச்சாலைக்கு சென்று தெனாலியைப் பார்த்து நடந்ததைக் கூறினார். அதற்குத் தெனாலி, மன்னரிடம் "தன்னை சிறையில் அடைத்ததற்கு நன்றி!" என்றான். மன்னர், "நான் தான் உனக்கு நன்றி கூற வேண்டும். ஆனால் நீ ஏன் எனக்கு நன்றி கூறுகிறாய்?" என்று கேட்டார். அதற்குத் தெனாலி, "நீங்கள் என்னை சிறையில் அடைக்காவிட்டால் நானும் உங்களுடன் வந்திருப்பேன். என்னை அவர்கள் தூக்கிச் சென்று பலியிட்டு இருப்பார்கள். அதனால் தான் நன்றி கூறினேன்" என்றான். மன்னர் தெனாலி ராமனைப் பாராட்டி பரிசுகள் வழங்கினார்.

***





# 8. சொன்னதைச் சொல்லும் கிளி

விஜயநகர அரசரான கிருஷ்ணதேவராயர் தனது அரண்மனையில் ஒரு அழகான கிளியை வளர்த்து வந்தார். அதைக் கூண்டில் அடைத்துவைத்து அதற்குத் தேவையான உணவினையும் அளித்துவந்தார். மேலும் அதற்கு, "வாங்க! வாங்க! வணக்கம்."என்ற நல்ல சொற்களையும் கற்றுக்கொடுத்தார்.

ஒரு நாள் தெனாலிராமன் அரண்மனைக்கு வந்தான். அப்பொழுது கிளி தெனாலிராமனைக் கண்டதும், "வாங்க! வாங்க! வணக்கம்" என்று கூறி தெனாலிராமனை வரவேற்றது. உடனே தெனாலிராமன், "யாரது? கிளியா பேசியது!" என்று கூறிக்கொண்டே அதன் அருகில் சென்றான். அப்பொழுது மன்னர் அங்கே வந்து தெனாலிராமனைப் பார்த்து, வா, ராமா! கிளியின் பேச்சில் மயங்கிவிட்டாயா? ஆமாம் மன்னா! என்ன கிளியெல்லாம் வளர்க்க ஆரம்பித்துவிட்டீர்கள்? என்றான் தெனாலிராமன்.

அதற்கு மன்னர், இது ஒரு அதிசயக்கிளி. இதற்கு நல்ல வார்த்தைகள் மட்டும் தான்பேசத்தெரியும் என்றார். "அதற்குத் தெனாலிராமன் நீங்கள் கூறுவது தவறு மன்னா! ஏனென்றால் கிளிகள், நாம் என்ன பேசக்கற்றுக் கொடுக்கிறோமோ அதை மட்டும் தான் பேசும். மேலும் அதற்குச் சிந்தித்துப் பேசும் திறனும் கிடையாது" என்றான்.

உடனே மன்னர், "இல்லை ராமா! இது வித்தியாசமான கிளி. நல்ல வார்த்தைகள் மட்டும் தான் பேசும்" என்றார். "மன்னிக்க வேண்டும் அரசே! நீங்கள் அனுமதி தந்தால் அது பொய்யென்று நிரூபித்துக்காட்டுகின்றேன்" என்றான் தெனாலிராமன். அதைக்கேட்ட மன்னர், "அதை எவ்வாறு நிரூபிப்பாய் இராமா? வீணாக என் கோபத்தைக் கிளறாதே!" என்றார். "மன்னா எனது பராமரிப்பில் கிளியை இரண்டு மாதம் வளர்க்கிறேன்" என்றான் தெனாலிராமன்.





சரி, நீ நிரூபிக்கவில்லையென்றால் உனக்கு தண்டனை உறுதி” என்றார் மன்னர்.

தெனாலிராமன் அந்தக்கிளியை வீட்டிற்கு எடுத்துச் சென்று, “அரசர் ஒரு நிதானமில்லாதவர், முன்கோபி” என்று அதற்குக் கற்றுக்கொடுத்தான். தெனாலிராமன் சொன்னது போல இரண்டு மாதங்கள் கழித்து கிளியை அரண்மனைக்கு எடுத்துச்சென்றான். கிளி அப்பொழுது, அரசர் நிதானமில்லாதவர், முன்கோபி என்று தெனாலிராமன் கற்றுக்கொடுத்த வார்த்தைகளைக் கூறியது. அதைக்கேட்ட அரசர், இராமா! இங்கே இருந்தபொழுது நல்ல வார்த்தைகளை மட்டும் தானே பேசியது. இப்பொழுது பேசிய தீய வார்த்தைகளையெல்லாம் பேசவில்லையே! என் கிளியை என்ன செய்தாய்? என்று கேட்டார்.

அதற்குத் தெனாலிராமன் “நான் இந்த கிளிக்கு தினமும் சிறிது உணவு கொடுத்து இந்த வார்த்தைகளை கற்றுக் கொடுத்தேன். நான் கொடுத்த உணவுக்கு ஆசைப்பட்டுதான் கிளி இவ்வாறு பேசியது. மேலும் பறவைகளுக்கு சொந்தமாக பேசத்தெரியாது. அதுமட்டுமில்லாமல் நாம் பறவைகளை கூண்டில் அடைத்து வளர்க்கக் கூடாது” என்று தெனாலிராமன் கூறினான். உடனே மன்னர், தன் தவற்றை உணர்ந்து கிளியை கூண்டில் இருந்து விடுவித்தார்.

***



# 9. பானைக்குள் யானை

விஜயநகர அரசரான கிருஸ்ணதேவராயர், தான் அரசபைக்கு வருமுன்னரே, மற்றவர்கள் வந்துவிட வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார், அப்படி யாராவது குறித்த நேரத்தில் வர முடியவில்லையெனில், அவர்கள் தாமதமாக வருவதற்கான காரணத்தை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். இந்த கட்டளையை மீறுபவர்களின் மீது அரசர் கடுமையான நடவடிக்கை எடுப்பார் என்றும் கூறப்பட்டு இருந்தது .

ஒரு சமயம் அரசர் அரசவையில் நுழைந்த போது, தெனாலிராமன் மட்டும் வராததைக் கண்டு, தெனாலிராமன் ஏன் வரவில்லை? ஏதாவது தகவல் அனுப்பியுள்ளானா?" என்று சபையோரைக் கேட்டார். உடனே சபையில் ஒருவர் எழுந்து, "இல்லை, மன்னா! அவர் அரசவைக்கும் வரவில்லை; தகவலும் அனுப்பவில்லை! " என்று கூறினார். அதைக்கேட்ட மன்னர், தெனாலிராமனை அழைத்து வர காவலர்களுக்கு உத்தரவிட்டார். தெனாலிராமனை அழைத்து வரச் சென்ற காவலர் சிறிது நேரத்தில் வந்து, "பிரபு! அவருடைய குழந்தை அழுது அடம் பிடிக்கிறதாம்! அதை சமாதானப்படுத்திய பிறகு வருவதாகக் கூறினார்!" என்றான். "அவனுக்கு என்ன திமிர் இருந்தால் இப்படி ஒரு பதிலை கூறியிருப்பான்!. மிகவும் கெட்டிக்காரனான தெனாலிராமனுக்கு அழுகின்ற குழந்தையை சமாதானப்படுத்த முடியவில்லையா? இது நம்புகிற மாதிரி இல்லையே!" என்றார் அரசர். மேலும் கோபத்துடன், "தெனாலிராமன் உடனே இங்கு வர வேண்டும். என் கட்டளையும் மீறி அவன் வர மறுத்தால், அவனைக் கட்டியிழுத்து வாருங்கள்!" என்று உத்தரவிட்டார். அரசர் அவ்வாறு கட்டளைப் பிறப்பிக்கும்போதே, தெனாலிராமன் அவசர அவசரமாக சபைக்குள் நுழைந்து மன்னரிடம், "என்னை மன்னித்து விடுங்கள் மன்னா! என்னுடைய மூன்று வயதுக் குழந்தை காலையிலிருந்து அடம் பிடித்து அழுது கொண்டேயிருந்தது.



அவனை சமாதானப்படுத்தும் முயற்சியில் இருந்ததால் என்னால் தகவல் அனுப்பமுடியவில்லை. குழந்தையை சமாதானப்படுத்தி அரசவைக்கு வருவதற்குச் சற்று கால தாமதமானது" என்றார்.

"உன்னால் ஒரு குழந்தையை சமாதானப்படுத்த முடியவில்லை என்பதை என்னால் நம்ப முடியவில்லை!" என்றார் மன்னர். "நான் நடந்ததைக் கூறுகிறேன், கேளுங்கள்! காலையில் எழுந்தவுடன் என் குழந்தை "எனக்கு ஒரு உயிருள்ள யானை வேண்டும்!" என்று அழுக, உடனே நானும் ஒரு உயிருள்ள யானையை வரச்செய்தேன். அதன் பிறகு, ஒரு பானை கேட்டான். பானையும் கொடுத்தேன். இப்பொழுது "பானைக்குள் யானை நுழைய வேண்டும்! என்று சொல்லிப் பிடிவாதம் செய்தான். அது என்னால் எப்படி முடியும்? அது முடியாத காரியம் என்று சொன்னாலும் கேட்கவில்லை. அதனால் குழந்தை கேட்டபடி செய்து காண்பித்துவிட்டு வர எனக்குத் தாமதமாகி விட்டது!" என்று தெனாலிராமன் பரிதாபமாகக் கூறினான். "என்ன? பானைக்குள் யானை சென்றதா?" அது எப்படி? நிரூபி! என்று அரசர் கூறினார்.

உடனே தெனாலிராமனும் சரி என்று கூறிவிட்டு மன்னரிடம், "எனக்கு ஒரு பானையும் யானையும் தாருங்கள்" என்றான். மன்னரும் அவன் கேட்டபடியே கொடுத்தார். தெனாலிராமன், முதலில் யானையை தொலைவில் நிற்கவைத்தான். அதன் பிறகு பானையில் இரண்டு துளைகளை இட்டு அந்த ஓட்டைகளின் வாயிலாக யானையைப் பார்க்கும்படி செய்தான். அதை அரசரிடமும் பார்க்கக்கூறினான். அரசரும் அதைப்பார்த்துவிட்டு தெனாலிராமனின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டினார்.

***





# 10. பூனை விலையில் குதிரை

தெனாலிராமன் வசித்து வந்த ஊரில் வையாபுரி என்பவர் மிகவும் பணத்தாசைப் பிடித்தவர். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு அதிகமான வேலையும் , குறைவான ஊதியத்தையும் கொடுத்தார். இதைக் கேள்விப்பட்ட தெனாலிராமன், அவரைத் திருத்த திட்டம் போட்டார்.

ஒரு நாள் தெனாலிராமன் அவரிடம் சென்று , "எனது மகனின் படிப்புச் செலவிற்கு சிறிதளவு பணம் கடனாகக் கொடுங்கள் " என்று கேட்டார். அதற்குப் பணக்காரன், பணத்தை எப்பொழுது திருப்பிக்கொடுப்பாய்" என்றார். உடனே தெனாலிராமன், "என்னிடம் உயர் ஜாதி அரேபியக் குதிரை ஒன்று உள்ளது. அது நல்ல விலை போகும். உடல் நலம் தேறியதும் அந்தக் குதிரையை விற்றுப் பணம் தருகிறேன்" என்று கூறினார். அதைக்கேட்ட பணக்காரனும் நம்பிக்கையோடு பணம் கொடுத்தார். பணத்தைப் பெற்றுக் கொண்ட தெனாலிராமன் அதை தனது மகனின் படிப்புக்காகச் செலவிட்டார். பல மாதங்கள் சென்றன. ஆனாலும் தெனாலிராமன், பணக்காரனிடம் வாங்கிய பணத்தைக் கொடுக்கவே இல்லை. அதனால் அவர், தெனாலிராமனுடைய வீட்டிற்குச் சென்று "குதிரையை விற்றுப்பணம் தருவதாகக் கூறினாயே! ஏன் இன்னும் தரவில்லை? உடனே கொடு" என்று கேட்டார். அதற்குத் தெனாலிராமன் "சரி குதிரையை விற்றுப் பணம் தருகிறேன். என்னுடன் வாருங்கள்" என்று அவரையும் அழைத்துக் கொண்டு சந்தைக்குப் புறப்படும் போது குதிரையையும் அதனுடன் ஒரு பூனையையும் அழைத்துச் சென்றார்.

சந்தையில் தெனாலிராமனின் பளபளப்பான குதிரையைப் பார்க்கப் பெரிய கூட்டமே கூடி விட்டது. அப்போது ஒரு பெருஞ்செல்வந்தர் தெனாலிராமனைப் பார்த்து, "உன் குதிரை என்ன விலை?" என்று கேட்டார். அதற்குத் தெனாலிராமன், "குதிரையின் விலை 1 பவுன்.



பூனையின் விலை 500 பவுன். ஆனால் இந்தப் பூனையையும் சேர்த்து வாங்கினால் தான் இக்குதிரையைக் கொடுப்பேன்” என்றார். தெனாலிராமனின் பேச்சு அவருக்குத் தவறாகத் தெரிந்தாலும் குதிரையை வாங்க வேண்டும் என்ற ஆர்வத்தில் 501 பவுன் கொடுத்து குதிரையையும் பூனையையும் வாங்கிச் சென்றார்.

அந்த 501 பவுனில் ஒரு பவுனை மட்டும் பணக்காரனுக்குக் கொடுத்தார் தெனாலிராமன். ஆனால் பணக்காரரோ ஒரு பவுனை வாங்க மறுத்து, “குதிரை அதிக விலைக்குப் போகுமென்று நினைத்து தானே உனக்குப் பணம் கொடுத்தேன். நீ இப்படி ஏமாற்றுகிறாயே!” என்றார்.

அதற்குத் தெனாலிராமன், “ஐயா! இந்தக் குதிரையை விற்று தான் உமக்குப்பணம் தருகிறேன் என்று சொன்னேன். அதன்படியே குதிரையை விற்ற 1 பவுனையும் உனக்கே கொடுத்து விட்டேன். நீ வாங்க மாட்டேன் என்கிறாயே! இது என்ன நியாயம்” என்றார். பணக்காரரோ 500 பவுன் வேண்டுமென்றார். இறுதியில் இவர்கள் வழக்கு மன்னரிடம் சென்றது.

மன்னர் இருவரிடமும் விசாரித்தார். பின் “தெனாலிராமன் செய்தது சரியே!” என்று தீர்ப்புக் கூறினார்.

***



வரம்பெற்ற வல்லவன், திருட்டைப் பிடித்த காவலாளி தங்க மாம்பழம் தந்து, குட்டி ஈன்ற பாத்திரம், சாட்டையடிப் பரிசு, பானைக்குள் சென்ற யானை, குறைந்த விலை குதிரையை புத்திக்கூர்மையிலும் சந்தர்ப்பத்தை சாதகமாக மாற்றும் சாமர்த்தியன் கதை சொல்லும் உண்மைகளைக் கற்று நாமும் வாழ்ந்திடுவோம்.

**விதிகளுடன் விளையாடலாம்**
**விளையாட்டாய் கதைப் படித்த நீங்கள்**
**கதையாய் விளையாட்டுக்களை அறிய**
**விரையுங்கள் எமது அடுத்த படைப்புக்கு.**


உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.WorldTamilAcademy.com
அறிவே வளம்
உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com